## ★ நஷ்டஈடு விண்ணப்பத்தில்
## கணவனுக்கு இரு மனைவிகள் உரிமைகோருகின்றனர்

வழிசெயல்கள் காரணமாக இறந்தவர்களின் விண்ணப்பங்களில் கணவனை இழந்தமைக்காக விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் 50 பேருக்கு இரண்டு மனைவியர் வீதம் நஷ்டஈடு கோரியுள்ளனர். யாழ் செயலக புனர் வாழ்வுப் பிரிவு விண்ணப்பங்களை —04 ஆம் பக்கம் பார்க்க

## ஈழ, பலஸ்தீன அகதிகளுக்கு அமெ. 60 லட்சம் டொலர் உதவி

இலங்கையில் நடைபெறும் உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமெரிக்க அரசு பத்து லட்சம் டொலர் உதவி வழங்கவுள்ளது. இத்தகவலை வாஷிங்டனில் வெளியிட்ட அமெரிக்க இராஜாங்க அமைச்சு இவ்வுதவி உணவு மற்றும் வைத்திய உபகரணங்களாக வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டது. இதேவேளை இஸ்ரேல் ஆக்கிர — 04 ஆம் பக்கம் பார்க்க

## ★ நிவாரணத்தில் மோசடி
## முகாமையாளர், விற்பனையாளர் தற்காலிகமாக நீக்கம்

தற்போது வழங்கப்படும் உலர் உணவுப் பொருள்களின் நிறையில் மோசடி செய்த கிளை முகாமையாளரும், விற்பனையாளரும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். உடுப்பிட்டி பல நோ. கூ. சங்க கிளை ஒன்றிலேயே இச்சம்பவம் —04-ம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 115 பிரமோதூத பங்குனி 08 (22-03-1991) வெள்ளி

## தேர்தலுக்கு சார்க் குழு அழைப்பு

தென்னிலங்கையில் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலின் போது தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்க சார்க் கண்காணிப்பு குழுவை அழைக்கப்போவதாக ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவித்துள்ளார். சார்க் நாடுகளின் கண்காணிப்பு குழுவை அழைப்பது தொடர்பாக வெளிவிவகார அமைச்சு காத் —4 ஆம் பக்கம் பார்க்க

## நவீனமுறையில் கனடா தொடர்பு 4 இலங்கையர் தமிழகத்தில் கைது

சென்னை மாதவரம் பகுதியில் தொலைபேசி கம்பிகளில் சட்டவிரோதமாக தொடர்பை ஏற்படுத்திய நான்கு இலங்கைத் தமிழர்கள் தமிழக பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர். இப்பகுதியூடாக செல்லும் தொலைபேசி வயர்களிடையே புதிய தொழில்நுட்ப முறையை கையாண்டு இந்தநான்கு பேரும் கனடாவில் உள்ள உறவினருடன் தொடர்பு கொண்டு வந்தனர். பொலிஸாரிடம் சிக்கியுள்ள இவர்கள் தாம் கடந்த ஆறு மாதமாக இந்த 'நவீன பாணியிலேயே' கனடாவில் உள்ள தமது உறவினருடன் தொடர்பு கொண்டதாக கூறியுள்ளனராம். —04 ஆம் பக்கம் பார்க்க

# சிலாவத்துறை முகாம் மீது 3ஆம் நாளாகத் தாக்குதல்

## இழப்புக் குறித்து இராணுவம் மௌனம்

மன்னார் - சிலாவத்துறை இராணுவமுகாம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல் 3 ஆம் நாளாக நேற்றும் தொடர்ந்து நடை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோதல்கள் தற்போது சிலாவத்துறை முகாமின் பிற்புறமாக உள்ள கடற்கரையோரப் பகுதியில் நடைபெறுகின்றன.

படையினருக்கு உதவியாக கடற்படை கப்பல்கள் கரையோரங்களை நோக்கி பீரங்கித்தாக்குதல் நடாத்துகின்றன.

இப்பகுதியில் புலிகளின் தாக்குதல் மேலும் தீவிரமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மன்னார் சம்பவம் குறித்து கருத்து தெரி —4 ஆம் பக்கம் பார்க்க

## பாண் விலை 10-50 ஆக பேக்கரிகள் சங்கம் நிர்ணயம்

யாழ் மாவட்ட பேக்கரிகள் உரிமையாளர் சங்கம் பாணின் ஆகக்கூடிய விலையை 10-50 சதமாக நாளை சனி முதல் நிர்ணயித்துள்ளது.

நேற்றுமாலை பரியோவான் கல்லூரியில் இடம் பெற்ற பேக்கரிகள் சங்கக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் மேற் கொள்ளப்பட்டது.

பாண் 350 கிராம் நிறையுடையதாக இருப்பதுடன் —4 ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவு நகரப்பகுதியில் கட்டடங்கள் அழிகின்றன

முல்லைத்தீவு நகரப்பகுதிக் கட்டடங்கள் பலவும் இராணுவத்தினரின் பலத்த குண்டு வீச்சு ஷெல் தாக்குதல்களி... மீனவ தொழிற்சாலைகள் அரச அலுவலகக் கட்டடங்கள் அழிந்து வருகின்றன. (3...

## மன்னார் சென்ற ராணுவம் மீது தாக்கு

நேற்று நண்பகல் இரண்டு மணியளவில் வவுனியா இராணுவத்தினர் மன்னார் பக்கமாக வெளியேற முயன்றுள்ளனர்.

புதுவீதியூடாக நெலுக்குளம் செல்ல முயன்ற இந்த இராணுவத்தினரை வழிமறித்து புலிகள் தாக்குதலை நடாத்தினர்.

சில மணி நேர மோதலின் பின் படையினர் பின்வாங்கி வவுனியா சென்றுவிட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ப 11)

## ஜெனரல் சிறில் ரணதுங்க சொல்கிறார்
## குண்டை இலக்கு நோக்கி வீசியும் 120 யாருக்கு அப்பால் வீழ்கிறது

வடக்கில் விமானங்கள் இலக்கை நோக்கி குண்டு வீசுகின்றன. ஆனால் குண்டுகள் இலக்கிலிருந்து 120 யாருக்கு அப்பாலும் வீழ்கின்றன. இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்க கூறியுள்ளார்.

குண்டு வீச்சில் ஏற்படும் பொதுமக்கள் உயிரிழப்பு தவிர்க்க முடியாமல் போகும் அதேசமயம் உயிரிழப்பு குறித்து எமக்கு முறையிடலாம் எனவும் ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

## நேற்றும் பயணம் ரத்து

நேற்றும் பல பிரயாணிகள் கொழும்பு போவதற்கு முதிரைச் சந்தைக்கு வந்தும் பூநகரியூடாக வவுனியாவுக்கான போக்குவரத்து நடைபெறாததால் வீடு திரும்பிச் சென்றனர். (33)

## கூட்டணி ஈ.பி.ஆர்.எல்.எவ். இழுபறி
## புதிய யாழ் மாவட்ட எம்.பியாக ஸ்ரீநிவாசன் பதவியேற்பு

சென்னையில் மரணமான தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ் மாவட்ட எம். பி. யோகசங்கரியின் (ஈ. பி. ஆர். எல். எவ்) இடத்துக்கு ஈ. என். டி. எல். எவ் ஐ சேர்ந்த ஸ்ரீநிவாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய யாழ் மாவட்ட எம். பி யாக இவர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில்

## மன்னாரில் வீர மரணமடைந்தோர்

ரஞ்சன் (செல்வநாயகம் - தயாளன் பருத்தித்துறை), சுந்தர் (செபமாலை மரிய தபேந்திரன் - சின்னருடா), புஷவர் (யோகசுவாமி செந்தூரன் - வல்வெட்டித்துறை), குட்டி (செல்வநாயகம் செல்வகுமார் - யாழ்ப்பாணம்), சோமன் (விநாயகமூர்த்தி ராஜேந்திரன் - கல்வயல்), சயந்தன் (செல்வராசா யோகேஸ்வரன் - நவாலி), அன்ரனி (துரைச்சாமி அகிலன் - ஜலட்டி யாழ்ப்பாணம்), லோகன் (சிவப்பிரகாசம் சிவலோகநாதன் - மிருசுவில்), ரஞ்சித்தாத்தா (கதிர்காமு குணபாலசிங்கம் - பளை), நாதன் (தியாகராஜா சிவானந்தன் - பளை), அம்பி (நாகலிங்கம் கனகரஞ்சன் - புத்தூர்) —4 ஆம் பக்கம் பார்க்க

யாழ் மாவட்ட பேக்கரிகள் உரிமையாளர் சங்கம் பாணின் ஆகக்கூடிய விலையை 19-50 சதமாக நாளை சனி முதல் நிர்ணயித்துள்ளது.

நேற்றுமாலை பகிரோவான் கலூராயில் இடம் பெற்ற பேக்கரிகள் சங்கக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

பாண் 350 கிராம் நிறையுடையதாக இருப்பதுடன்

—4 ஆம் பக்கம் பார்க்க

பலம் குறித்து கருத்து தெரி

—4 ஆம் பக்கம் பார்க்க

புள்ளார்.

குண்டு வீச்சில் ஏற்படும் பொதுமக்கள் உயிரிழப்பு

## முல்லைத்தீவு நகரப்பகுதியில் கட்டடங்கள் அழிகின்றன

முல்லைத்தீவு நகரப்பகுதிக் கட்டடங்கள் பலவும் இராணுவத்தினரின் பலத்த குண்டு வீச்சு ஷெல் தாக்குதல்களினால் மேலும் சேதமடைந்து வருகின்றன.

கரையோரப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவம் பொருளாதாரத்தை அழிக்கும் நோக்கில் அப்பகுதிகளை நோக்கி அடிக்கடி தாக்குதலை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கடைக்கட்டிடங்கள் தனியார் கட்டடங்கள் மீனவ தொழிற்சாலைகள் அரச அலுவலகக் கட்டடங்கள் அழிந்து வருகின்றன. (3ஃ

## புதுக்குடியிருப்பு பகுதி வழமைக்கு திரும்புகிறது

புதுக்குடியிருப்பு பகுதி நீண்ட நாட்களுக்குப் பின்னர் வழமைக்குத் திரும்பிய போதிலும் பொது மக்கள் மத்தியில் பீதிநிலை தணியவில்லை

வான் தாக்குதல் அடிக்கடி ஏற்பட்டு பலர் இறந்ததையடுத்து மனித சஞ்சார மற்றுக் கிடந்த இப்பகுதி தற்போது படிப்படியாக வழமைக்குத்

—4 ஆம் பக்கம் பார்க்க

### கூட்டணி ஈ.பி.ஆர்.எல்.எவ். இழுபறி

## புதிய யாழ் மாவட்ட எம்.பியாக ஸ்ரீநிவாசன் பதவியேற்பு

சென்னையில் மரணமான தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ் மாவட்ட எம். பி. யோகசங்கரியின் (ஈ. பி. ஆர். எல். எவ்) இடத்துக்கு ஈ. என். டி. எல். எவ் ஐ சேர்ந்த ஸ்ரீநிவாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய யாழ் மாவட்ட எம். பி யாக இவர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உப சபாநாயகர் காமினி பொன்சேகா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

யோகசங்கரி கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டியதால் அவரது இடத்துக்கு கூட்டணியிலேயே

—4 ஆம் பக்கம் பார்க்க

## வீர மரணமடைந்தோர்

ரஞ்சன் (செல்வநாயகம் - தயாளன் பருத்தித்துறை), சுந்தர் (செபமாலை மரிய தபேந்திரன் - சினன்ருடா), புலவர் (யோகசுவாமி செந்தூரன் - வல்வெட்டித்துறை), குட்டி (செல்வநாயகம் செல்வகுமாரி - யாழ்ப்பாணம்), சோமன் (விநாயகமூர்த்தி ராஜேந்திரன் - கல்வயல்), சயந்தன் (செல்வராசா யோகேஸ்வரன் - நவாலி), அன்ரனி (துரைச்சாமி அகிலன் - கலட்டி யாழ்ப்பாணம்), லோகன் (சிவப்பிரகாசம் சிவலோகநாதன் - மிருசுவில்), ரஞ்சித்தாத்தா (கதிர்காமு குணபாலசிங்கம் - பளை), நாதன் (தியாகராஜா சிவானந்தன் - பளை), அம்பி (நாகலிங்கம் கனகரஞ்சன் - புத்தூர்)

—4 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் இம்முறை சிறுபோகம் செய்ய ஏற்பாடு

கிளிநொச்சியில் இம்முறை சிறுபோக செய்கையை திறமையாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என விவசாயப் பகுதி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்காக கொழும்பிலிருந்து மருந்து வகைகளை கப்பல் மூலமாக கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த முறை பெரும் போகச் செய்கை நாட்டின் நிலைமை காரணமாக பாதிக்கப்பட்டது தெரிந்

—4 ஆம் பக்கம் பார்க்க

## கிநொச்சியில் ஊரடங்கு

கிளிநொச்சி மாவட்டத்தில் உடனடியாக ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வானொலி நேற்று நண்பகல் அறிவித்தது.

மறு அறிவித்தல்வரை ஊரடங்கு அமுலில் இருக்குமெனவும் அறிவிக்கப்பட்டது.

## மாங்குளம் மக்கள் வங்கி துணுக்காயில் இயங்க முயற்சி

மாங்குளம் மக்கள் வங்கியை மீள இயங்கவைக்க மக்கள் வங்கி யாழ் மாவட்ட தலைமை காரியாலயம் துரித முயற்சி எடுத்து வருவதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

மாங்குளம் மக்கள் வங்கியை துணுக்காயில் இயங்கவைப்பதற்கு முயற்சிகள் பலனளித்ததும் வங்கி அங்கு இயங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது

முல்லைத்தீவு மக்கள் வங்கியின் ஆவணங்களை எடுத்துவர கூட்டுப்படைத் தலைமையகத்திடம் அனுமதி கொழும்பு தலைமையகம் கேட்ட போது அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (74)

## 3 கூட்டுறவுச்சங்கக் கிளைகள் நிறைகளில் மோசடி

நிறைகளில் மோசடி செய்யும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை யாழ் உள்நாட்டு வர்த்தகத் திணைக்களப் பகுதியினர் கண்டுபிடித்துவருகின்றனர்.

இக்குழுவினரிடம் அண்மையில் வடமாராட்சிப் பகுதியில்

—9 ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவுப் பகுதியில் கர்ப்பிணிகள் சிசுக்கள் பாதிப்பு

முல்லைத்தீவில் சத்துணவுகள் இல்லாததால் பல கர்ப்பிணிகள் சிசுக்கள் இறக்க நேரிடுவதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த பத்து மாதங்களாக கர்ப்பிணிகளுக்குரிய சத்துணவுகள் பால்மா வகைகள் வர முடியாது தடைப்பட்டு வந்ததினால் கிராமப்புறங்களில் உள்ள நூற்றுக்கு மேற்பட்ட கர்ப்பிணிகள் சிசுக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மற்றும் கிராமப்புறங்களில் கர்ப்பிணிகள் சிசுக்களுக்கான

—4 ஆம் பக்கம் பார்க்க

## இரத்ததானம் செய்வதற்கு மாணவர்கள் முண்டியடிப்பு!

யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு கடந்த சில தினங்களில் மட்டும் இருநூறுக்கும் அதிகமான மாணவர்கள் இரத்ததானம் செய்துள்ளனர்.

நேற்று மட்டும் ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் நூறு மாணவர்கள் இரத்த வங்கியில் இரத்ததானம் வழங்கியதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் யாழ்

—4 ஆம் பக்கம் பார்க்க

# குவைத் நிருமாணத்துறையில் பெருமளவு வேலைவாய்ப்பு! இலங்கையிலிருந்து அதிகமானோருக்குச் சந்தர்ப்பம்!!

குவைத்தில் நிருமாண, புனர் நிருமாண வேலைகளில் ஈடுபடுவதற்கென இலங்கையிலிருந்து பெருமளவு தொழிலாளர்கள் திரட்டப்படவுள்ளதாக இலங்கை வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

குவைத்தில் நீர் விநியோக, மின்சார விநியோக மற்றும் வடிகாலமைப்பு வேலைகளும் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளைத் திருத்தியமைக்கும் வேலைகளும் பெருமளவில் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கெனப் பெருமளவு வெளிநாட்டுத் தொழிலாளர்கள் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

குவைத்தில் தொழில்நுட்ப ஊழியர்களுடன் மேசன், தச்சுத் தொழில்களில் தேர்ச்சியுள்ளவர்களுக்கும் பெருமளவு வெற்றிடங்கள் உள்ளன.

வேலை வாய்ப்பைப் பெறவிரும்புவோர் தமது பெயர் மற்றும் தொழிற் தகமை விபரங்களைக் கொழும்பு வேலை வாய்ப்புப் பணியக தகவல் நிலையத்தில் அல்லது மாவட்ட நிலையங்களில் பதிவு செய்து கொளளல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாணிக்க விநாயகர் மஹாசங்காபிஷேகம்

இன்று வெள்ளிக்கிழமை நவக்கிரி மாணிக்க விநாயகர் ஆலயத்தில் மஹாசங்காபிஷேகம் நடைபெற உள்ளது (ம-10

## புலி இலச்சினை

தமிழீழ தேசத்தின் தனித்துவத்தையும், தமிழீழ விடுதலை இலட்சியத்தையும் சித்திரிக்கும் சின்னம் புலி. புலிச்சின்னத்தைத் தமிழீழத்தின் தேசிய சின்னமாகத் தலைவர் பிரபாகரன் தேர்ந்தெடுத்ததற்குக் காரணமுண்டு.

புலிச்சின்னம் திராவிடர் நாகரீகத்தில் வேரூன்றி நிற்கும் ஒரு படிமம். தமிழரின் வீர வரலாற்றையும், தேசிய எழுச்சியையும் சித்திரித்துக் காட்டும் குறியீடு. வலிமையையும், வீரத்தையும், தன்னம்பிக்கையையும் குறித்துக் காட்டும் சின்னம். அன்று வீர வரலாறு படைத்த சோழ மன்னர்களும் புலிக்கொடியின் கீழ் தமிழனை எழுச்சி கொள்ளச் செய்தனர். தமிழுணர்வை, இன உணர்வை, தேசியப்பற்றுணர்வை, பகைவனுக்கு அஞ்சாத வீர உணர்வைப் பிரதிபலிக்கும் ஆழமான அற்புதமான குறியீடாகத் திகழ்கிறது புலிச் சின்னம்.

- நன்றி: விடுதலைப் புலிகள்

## நந்தாவில் கும்பாபிஷேகம்

கொக்குவில் நந்தாவில் சுந்தரபுலத்து மனோன்மணி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேக விழா 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது.

23 ஆம் திகதி நாளைசனிக்கிழமைகிரியைகள் ஆரம்பமாகும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அம்பாளுக்கு எண்ணெய் சாத்தும் வைபவம் இடம்பெறும். (30)

## குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பூசி

23 ஆம் திகதி சனிக்கிழமை கோண்டாவில் மேற்கு வேத பாராயண சனசமூக நிலையத்தில் குழந்தைகளுக்கான நோய்த் தடை மருந்துகள் ஏற்றப்பட உள்ளன.

3,5,7, 18 மாதக் குழந்தைகளுக்கு முக்கூட்டுத் தடை ஊசியும், போலியோ, மருந்துத் துளிகளும் கொடுக்கப்பட உள்ளன.

## "மாணவர்களுடைய ஆற்றல்களை வெளியிட சந்தர்ப்பம தர வேண்டும்"

- பேராசிரியர் ஆறுமுகம்

"நடந்து கொண்டிருக்கும் போர், நாம் நமது மொழிக்காக, எத்துணைத் தியாகங்கள் செய்யத் தயாராய் இருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது. தமிழ் விழாக்களை எடுத்து எமது மொழியை வளர்க்காது போனால், நாம் இவ்வளவு காலமும் எடுத்த முயற்சிகள் வீணாய் விழலாய் -விடும்!"

யாழ் இந்து மகளிர் கல்லூரி எடுத்த தமிழ்த்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் பல்கலைக் கழகக் கல்வியியற் பேராசிரியர் வ. ஆறுமுகம், மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"மாணவர்களுடைய ஆற்றல்களை வெளியிடுவதற்கான சந்தர்ப்பங்களை நாம் தரவேண்டும் 'ஆரோக்கியமான உடலுள் ஆரோக்கியமானமனம்' என்று முன்னோர் நம்பினர். போர்க்காலச் சூழலில், உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கப் போதுமான உணவு கிடைப்பதில்லை. ஆனால், இளைஞர்களுடைய நாட்டம், ஈடுபாடுகளை வளர்ப்பதன் மூலம் ஆரோக்கியமான மனம் வாய்க்க வகை செய்யலாம்" என பேராசிரியர் மேலும் தெரிவித்தார்.

விழாவில் இசை, நடனம், நாடக நிகழ்ச்சிகளும், பட்டிமன்றமும் இடம் பெற்றன.

## வைத்தீஸ்வராவில் 'போர்க்கால கானங்கள்'

யாழ் வைத்தீஸ்வரா கல்லூரியின் க. பொ. த. உயர்தர வகுப்பு 90ஆம் ஆண்டு மாணவனான சாமசன் (செல்வநாயகம் செல்வச் சந்திரன், இளம்புலி சாம்சன் செல்லப்பா குலேந்திரன் மற்றும் ஏனைய சக போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்து முகமாக சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வைத்தீஸ்வரா பிரதான மண்டபத்தில் நினைவஞ்சலிக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

இதில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட பிரசாரப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் இறப்புரையாற்றுவார் அத்துடன் "போர்க்கால இன்னிசைக் கானங்கள்" இசை நிகழ்ச்சியும் "களத்தில் காத்தான்" சித்து நடைக் கூத்தும் இடம் பெறவுள்ளன. (74)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்


காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய பழைய மாணவர் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு அதிபர் திரு. செ. தேவதாசன் தலைமையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மானி. இந்து மெய்வல்லுநர் போட்டி

மானிப்பாய் இந்துக்கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் 26 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குக் கல்லூரி மைதானத்தில் மானிப்பாய் கோட்டப் பாடசாலைகளின் அதிபரும், கல்லூரி அதிபருமான செ கேசவராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது. (30)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

22 - 03 - 1991



## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

16.03.91ஆம் திகதி வவுனியா செல்வநகர் சைக்கிளில் சென்ற சமயம் எனது பிரயாணப்பையை புளியங் குளத்திற்கும், ஓமந்தைக்கும் இடையில்

## மயிலிட்டி றோ. க மாணவருக்கு...

தற்போது பண்டத்தரிப்பு பசிந்தா றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் இயங்கி வரும் மயிலிட்டி றோமன் கத்தோலிக்கப் பாடசாலை மாணவர்க்குரிய இலவசப் பாடநூல்கள் வந்துசேர்ந்து

## வடமராட்சியில் சேவைக்காலப் பயிற்சி

வடமராட்சிப் பகுதி ஆசிரியர்களின் நன்மை கருதி 21 பாடங்களின் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளதாக வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது.

நூலகம், உடற்கல்வி, சமூகக் கல்வி, தமிழ் ஆரம்ப வகுப்பு



**சச்சிதானந்தம் கமலாதேவி**
**(லெப்டினன்ட் துர்க்கா)**

"எல்லோர்க்கும் நல்லவளாய் நீயிருந்தாய்
எம் குலத்தைக் காத்திடுவாய் என்றிருந்தோம்
தமிழினத்தைக் காப்பதற்கே களம்புகுந்து
தமிழ்த்தாயின் ஆரமதில் வைரமணியாகிவிட்டாய்."

பெற்றோர் சச்சிதானந்தம், கனகலட்சுமி, சகோதரர்கள், மைத்துனர், உற்றார், உறவினர்கள்.

03097

புளியங் குளத்திற்கும், ஓமந்தைக்கும் இடையில் தவறிவிட்டது அதில் எனது தேசிய அடையாள அட்டை, பாஸ்போட் (முஸ்லிம் பெயருடையது திஸாயா) வங்கிப் புத்தகம் (இல 4653; காசோலை பணம், உடைகள் என்பன இருந்தன கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து கீழ்வரும் முகவரிக்கு அறிவிக்கும்படியும் அல்லது முரசொலி காரியாலயத்தில் ஒப்படைக்கும்படியும் கேட்டுக் கொள்கிறோம். (தகவல் தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் ச.கனகலட்சுமி இல 337/7 தருமபுரம்,

03089

## சேவை

புளொக்(BLOCK)புகைப்படம் நபர் சில்- கலர் படம். ஓவியம், பிறேம் போடுதல், கலர் பிலிம் சுருள்கள். விரிக்கேஷ் முதலியவற்றிற்கு நாடுங்கள்: கொழும்பு விருடியோ- யாழ்ப்பாணம்.

03987

மாணவர்க்குரிய இலவசப் பாடநூல்கள் வந்துசேர்ந்து விட்டன என்றும், இவற்றைத் தினமும் பிற்பகல் 2 மணி முதல் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அதிபர் சகோதரி மேரி நிசெற்றா அறிவித்துள்ளார்.

## தர்மக் கேணியில் விளையாட்டுப் போட்டி

பளை-தர்மக்கேணி தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப்போட்டி அண்மையில் சிறப்பாக நடாத்தப்பட்டது.

இந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கிளி. கல்வி அதிகாரி பொன் சபாபதியும், சிறப்பு விருந்தினராக பளை கொத்தணி அதிபர் ஏ, பீ. செகலையாவும், கௌரவ விருந்தினர்களாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் என். பீ. கே. பாப்பா, முன்னாள் அதிபர் சு. இருளிணைசாமி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பாடசாலை அதிபர் வி. கே. இரத்தினகுமார் தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

நூலகம், உடற்கல்வி, சமூகக் கல்வி. தமிழ் ஆரம்ப வகுப்பு மேற்பிரிவு, ஆரம்ப வகுப்பு, கீழ்ப்பிரிவு, சங்கீதம், நடனம் சித்திரம், மனையியல், விவசாயம், வர்த்தகம், மரவேலை, வானொலி திருத்துதல், மோட்டர் திருத்துதல், இந்து சமயம், கிறிஸ்தவம், (றோ.க.) கிறிஸ்தவம், (றோ. க. அல்லாதது), விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கு இச் சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன. (15)

## கூட்டுறவாளராக ஜெயமணி தெரிவு

யாழ் மாவட்ட சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தின் மகளிர் குழுவினர் அண்மையில் யாழ் இந்துக் கல்லூரியில் நடாத்திய சர்வதேச மகளிர் தின விழாவில் பண்டத்தரிப்பு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத் தலைவி திருமதி ஜெயமணி ஜோசவ் சிறந்த கூட்டுறவாளராக தெரிவு செய்யப்பட்டு பொன்னாடை போர்த்தப்பட்டு கௌரவிக்கப்பட்டார். (13

# வளைகுடா போரால் குவைத்திலிருந்து திரும்பிய
# 75,000 தொழிலாளர்க்கு விரைவில் நஷ்டஈடு!

வளைகுடாப்போரை அடுத்து குவைத்திலிருந்து இலங்கை திரும்பிய தொழிலாளருக்கு நஷ்டஈடு வழங்க சர்வதேச தொழில் அமைப்பும், ஐக்கிய நாடுகள் சபையும் கொள்கையளவில் இணங்கியுள்ளன.

இந்த முடிவுக்கமைய குவைத்திலிருந்து நாடுதிரும்பியோரில் நஷ்டஈடு பெற விண்ணப்பித்த எழுபத்தி ஐயாயிரம் தொழிலாளர்களுக்கு விரைவில் நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கு நஷ்டஈட்டுடன் ஒருவருடகாலத்துக்குள் சர்வதேச நிறுவனங்களினால் வழங்கப்படும் நிவாரணத்தை வழங்கவும் நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

நஷ்டஈட்டு விண்ணப்பங்களைப் பரிசீலித்து, கொடுப்பனவு சிபார்சுகளை மேற்கொள்வதற்காக சர்வதேச தொழில் அமைப்பின் இரு பிரதிநிதிகள் இலங்கை வந்துள்ளனர்.

இவர்கள் இலங்கை வெளிநாட்டுப் பணியக அதிகாரிகளுடன் சேர்ந்து இந்தப் பணிகளில் இங்கு ஈடுபடுவர்.

## பறவை, விலங்குகளுக்கு இனி இந்தியாவில் விடுதலை

இந்தியாவில் இனி பொதுத் தேர்தல்களில் பறவைகள், விலங்குகள் ஆகிய சின்னங்கள் அகற்றப்படும் எனத் தேர்தல் கமிசன் அறிவித்துள்ளது.

தேர்தல் பிரசார வேலைகளில் பறவைகளும் விலங்குகளும் இதன் மூலம் சித்திரவதைக்குள்ளாவதைத் தவிர்க்குமுகமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சின்னங்கள் சுயேச்சைகளுக்கும், பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் வழங்கப்பட்டிருந்தன.

எனினும் தேசிய மாநில கட்சிகள் தமக்கு வழங்கப்பட்ட இச்சின்னங்களை இம்முறை உபயோகிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (16)

## கதிர்காமத்தில் கொட்டமடித்த கொம்பன் யானை பிடிபட்டது

கதிர்காமத்திற்கு செல்லும் யாத்திரிகர்களை கொம்பன் யானையொன்று கொன்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கதிர்காமம் கிரிவிகாரை காட்டுப் பகுதியிலேயே இந்த கொம்பன் யானை நடமாடி வந்ததாகவும், தற்போது இந்த யானை வனவிலங்குப் பகுதியால் பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த யானை இதுவரை பல யாத்திரிகர்களை தாக்கி கொன்றுள்ளதாகவும், இதனைப் பிடிக்க பல மாதங்களாக முயற்சி எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தொலைக்கல்விப் பயிற்சி நெறிக்கு பயிலுநர்களும் சேர்க்கப்படுவர்

யாழ் மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆசிரியர்கள் தொலைக்கல்வி பயிற்சிநெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தொலைக்கல்வி பெற விரும்பும் பயிலுநர்கள் தமது விண்ணப்பங்களை பணிப்பாளர், தொலைக்கல்வி, கல்வி அமைச்சு எனும் முகவரிக்கு கோட்டக்கல்வி அதிகாரிகளினூடாக அனுப்புதல் வேண்டுமென பணிக்கப்பட்டுள்ளது. (78)

## 'தடுப்புக்காவலில் உள்ளோருக்கும் வாக்களிக்கும் உரிமை உண்டு'

தென்பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் உள்ளூராட்சி தேர்தல்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட வேண்டுமென மக்கள் ஐக்கிய முன்னணி தலைவரும் மகரகம தொகுதி உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தனா பாராளுமன்றத்தில் கேட்டுள்ளார்.

இந்த இளைஞர்களுக்கும் வாக்களிக்க உரிமையுண்டு, அவர்களின் உரிமை அவர்களுக்குவழங்கப்பட வேண்டும் இதற்காக தேர்தலில் வாக்களிக்க அவர்கள் விடுதலை செய்யப்படல் வேண்டும் எனவும்தினேஷ் கேட்டுள்ளார்.

## சுயவிருப்பில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு
## தற்காலிக ஓய்வூதியம் உடன் கிடைக்கும்

சுயவிருப்பில் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், கல்வித்திணைக்கள ஊழியர்களின் ஓய்வூதியத்தை வழங்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு மாவட்டக்கல்விப் பணிப்பாளர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக தாமதங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக உடனடியாக விவரங்களை சேகரித்து சுயவிவரக் கோவையைப் பூர்த்திசெய்து கல்வித்திணைக்கள ஓய்வூதியக்கிளைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறும் சுயவிவரக் கோவை கிடைத்தவுடன் விவரங்கள் யாவும் சரியாக இருந்தால் உடனடியாக மாதாந்ததற்காலிக ஓய்வூதியப் பணக்கொடையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

இந்த தற்கால ஓய்வூதியம் 6 மாத காலம் வரை வழங்கப்படும் எனவும் இதற்குள் ஊழியர்களின் ஓய்வூதியம் வழங்கப்படும் எனவும் மாகாண கல்வி அமைச்சு அனுப்பிய சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (78)

## புகையிலைவிதைக்கு பெருங் கிராக்கி

புகையிலைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளமையால் புகையிலை விதைக்கு பெருங் கிராக்கி ஏற்பட்டு உள்ளது.

தற்போது ஒரு புகையிலை மரம் 35 ரூபா வரை கொள்

## கடமை நேரத்தில் 'டிமிக்கி' விடும் கல்விப்பகுதியினர் மீது கடும் நடவடிக்கை

யாழ் கல்வித்திணைக்களத்திலும், கோட்டக்கல்வி அலுவலகங்களில் நேரங்களில் கடமையிலிருந்து தம் வேண்டுமெனவும் மீறு

## சந்தைப் பகுதியில் பதுங்கு குழிகள்

சுன்னாகப் பகுதியில் சந்தை உள்விட்ட பொது மக்கள்

## பனை ஓலையில் கடதாசி

— சச்சி

எமது மூலவளங்களில் மிக முக்கியமான உபயோகம்மிக்கது பனை. இதன் உறுப்புக்களில் தற்பொழுது பயன்படுத்தப்படுவது பத்துச்சதவீதம் மட்டுமே. மிகுதி 90 சத வீதமும் விரயமாகிறது. இந்த வளம் மேற்கு நாடுகளில் இருப்பின் அதிலிருந்து பெறப்படும் தயாரிப்புகளை நாம் மிகக் கூடுதலான விலை கொடுத்து டப்பாக்களிலும், பொலித்தீன் பைகளிலுமாக முண்டியடித்து வாங்கிக் கொள்ள முற்படுவோம்.

### ஆய்வின் அவசியம்

இன்றைய காலகட்டத்தில் பனையின் பலனைப் பலவாகப் பகுத்து ஆய்ந்து வருகிறார்கள். ஆய்வாளர்கள் இடையறா முயற்சியில் ஈடுபட்டு வரும் இவ்வேளையில்; மிக மிகக் கூடுதலாக விரயமாகி வரும் பனையின் ஓலையின் தன்மையை ஆய்வது அவசியமும் அவசரமுமாகிறது.

### பனைஓலையின் பயன்பாடு

தற்போதைய பிரதான தேவையைப் பொறுத்து பனை ஓலையில் பாய், கடகம், பெட்டி போன்றவையும்; இன்னும் சற்று மேலதிகமாகப் பார்க்கப்போனால்தொப்பி, கைப்பை, சிறு அலங்காரப் பொருள்கள் மட்டுமே உற்பத்தியாக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் வடலியின் ஓலை விரயமாவது கணக்கிலடங்கா.

### ஓலையின் ஆயுள்

முன்பு ஒரு முறை ஆயுள்வேத கலாநிதியிடம் போயிருந்த போது, அவர் ஒரு கட்டு பனம்தாள் ஏட்டுச் சுவடிகளை நான் விரும்பிக் கேட்டபோது எடுத்துக் காட்டினார். அந்த ஏட்டுச் சுவடியில் வைத்திய வாகடங்கள் உயிர்மெய் எழுத்துக்களுக்கு குற்றே அறிமுகப்படுத்தப் படாத காலத்தில் எழுதப்பட்டன என்பதும் தெரிய வந்தது. அப்போது கலாநிதி அவர்கள் அந்த ஏட்டுச் சுவடி (600) அறுநூறு ஆண்டு காலத்துக்கு முற்பட்டது என்று சொன்னார். எப்படி இதனை இவ்வளவு காலத்துக்கும் பாதுகாத்து வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டபோது முள்முருக்கின் இலைச்சாறு இதனைப் பாதுகாக்கவும் எழுத்துக்களை தெளிவாக வாசிக்கவும் வளமாய் அமைகிறது என்று கூறி அவ் எழுத்துக்களுக்கு முருக்கின் இலை எடுத்து உரைசியும் காட்டினார்.

### பல தலைமுறைக்கு……

அக்கால வைத்திய ஆய்வுகள் அடங்கிய ஏட்டுச் சுவடியின் பயன் ஒருபுறம்; மறுபுறம் இதே ஏட்டுச் சுவடிகள் இனிமேலும் இளவயதினரான தனது பல பிற்சந்ததியினரின் தேவைக்குப்பயன் படத்தக்க வகையில் பக்குவப் படுத்தப்படும் என்றும் கூறினார். இவ்விதம் இந்த பனை ஓலைச் சுவடி ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழுதடையாமல் இருக்கும் என நம்பலாம். இன்றைய விஞ்ஞான ஆய்வுப்பெருக்காற்றலில் படைக்கப்பட்ட கடதாசி ஐம்பது அல்லது அறுபது வருடங்களுக்கு மேல் சிதைந்து விடுகின்றது. பனை ஓலைச் சுவடியின் பெருமை விளங்க இது போதுமானது.

### மூலப்பொருள்

இந்த ஏட்டுச் சுவடிகள் இத்தனை காலத்துக்கு எவ்விதம் பழுதும் அடையாமல் இருப்பதைக் கொண்டு இதனை நல்ல முறையில் ஆய்வு செய்தால் அதிக பலவித கடதாசி வகைகளை உற்பத்தி செய்ய முடியும் என்பது தெளிவாகும். இந்த ஏட்டுச் சுவடிக்கு அக்காலத்தில் முதிர்ந்த பனையின் குருத்தோலை உபயோகிக்கப்பட்டது என்பதையும் நாம் ஒருவாறு தெரிந்து கொள்ள முடியும்.

சிறு வடலியின் ஓலை அதன் நாரியலில் அல்லது தும்பியலில் (அதாவது Fibre) மென்மையானது. முதிர்ந்த பனையின் ஓலையின் தும்பியல் அல்லது நாரியல் சிறிது வன்மையானது என்பதையும் நாம் அறிவோம். ஆயினும் முதிர்ந்த பனை ஓலையின் குருத்தின் தும்பியல் மென்மையானதாகவே இருக்கும்.

ஆதலினால் சிறு வடலி ஓலை அதன் ஈர்க்கு நீக்கப்பட்டு துகளாக்கி அழுக வைத்து இதர இரசாயனக் கலவையோடு சிறந்த கடதாசியை உற்பத்தி செய்யலாம். வடலி என்னும்

கிராக்கி ஏற்பட்டு உள்ளது.
தற்போது ஒரு புகையிலை மரம் 35 ரூபா வரை கொள்வனவு செய்யப்படுகிறது. (ய-2)

யாழ் கல்வித்திணைக்களத்திலும், கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் கடமையாற்றும் ஊழியர்கள் அலுவலக நேரங்களில் கடமையிலிருத்தல் வேண்டுமெனவும் மீறுவோர் மீது கடும் நடவடிக்கையெடுக்கப்படுமெனவும் யாழ் கல்விப்பணிப்பாளர் சுற்று நிருப மூலம் பணித்துள்ளார்.

இதன்படி சகல அலுவலர்களும் மு. ப. 8 30 மணிக்கு பிந்தாமல் வருகை தந்து மாலை 4. 15 மணிககு முந்தாமல் அலுவலகத்திலிருந்து போகவேண்டும் என்றும் பிந்தி வருவோர் பொது நிர்வாகசுற்றறிக்கைகளுக்கு அமையநடத்தப்படுவார்கள்எனவும் பணிக்கப்பட்டுள்ளது.

சிற்றூழியர்கள் மு. ப. 7.30 மணிக்கு பிந்தாமல் வருகைதந்து பி. ப. 4 45 முந்தாமல் அலுவலகத்திலிருந்து வெளியேறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (78)

சுன்னாகப் பகுதியில் சந்தை உள்ளிட்ட பொது மக்கள் கூடும் பகுதிகளில் பதுங்குகுழிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. (ய-2)

## முகாமைத்துவ கருத்தரங்கு

மருதனாமடம் - கல்விக் கோட்டப் பிரிவுக்குட்பட்ட சகல பாடசாலைகளினதும் அதிபர்களுக்கான முகாமைத்துவக் கருத்தரங்கு மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை 23 ஆம் திகதி சனிக்கிழமையும் காலை 8-30 மணி முதல் மாலை3.00 மணி வரை நடைபெறவுள்ளது.

பாடசாலை முகாமைத்துவம் பற்றி இங்கு பலர் கருத்துரை வழங்கவுள்ளனர். (30)

...ஆதன்னிச் சிறு வடன் ஓலை அதன் ஈர்க்கு நீக்கப்பட்டு துகளாக்கி அழுக வைத்து இதர இரசாயனக் கலவையோடு சிறந்த கடதாசியை உற்பத்தி செய்யலாம். வடலி என்னும் போது அவற்றின் ஓலையின் மென்மையைப் பொறுத்து வடலிகளின் கால அளவை நோக்கி உபயோகிக்கலாம். முதிர்ந்த ஓலையில் தடிப்பான கடதாசி வகைகளையும் ஆக்கிக் கொள்ளலாம் என்பது தெளிவு.

### இன்றைய தேவை

தற்போது பெரும்பாலும் வைக்கோலும், கரும்பின் தும்புமே கடதாசி செய்யப் பயன்பட்டு வருகின்றன. இவற்றின் நாரியல் அல்லது தும்பியல் குறிப்பிட்ட ஓலைகளின் தும்பியல் புகளிலும் வேறுபட்டவையாக இருக்க முடியாது. இதனை இதுவரை இந்த வகையில் ஆய்வு செய்யாததே இதன் பெருமளவு விரயத்துக்கும், கீழ் நிலைக்கும் காரணமாகும். வருடந்தோறும் ஏன் நாள்தோறும் எவ்வளவு பாரமான ஓலை தமிழீழத்தின் வடபரப்பில் விரயமாகின்றது என்பதைக் கணக்கிடவில்லையே!

எனவே ஆய்வாளர்கள் இதனையும் அவசரம் மேற்கொண்டால் பெரும்பலனை எதிர்பார்க்கலாம்.

## தவக்கால நற்சிந்தனை

கர்த்தராகிய இயேசு உரைத்ததாவது: கொடுமைகள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும். மற்றவர்கள் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தை செய்யாதிருங்கள். உங்கள் வலது கை கொடுப்பதை இடது கைக்குதெரியாமல் இருக்கட்டும்.

உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்கள் தேவைகளை அவர் அறிந்திருக்கிறார். எனவே நீங்கள் ஜெபம் செய்யும் பொழுது வீண்வார்த்தைகளை அலம்பாதேயுங்கள்.

பூமியில் உங்களுக்கு அபரிமித பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம், பூமியில் பூச்சிகள் துருவி அவைகளைக் கெடுக்கும், திருடர்கள், கன்னமிட்டு திருடக் கூடும்: பரலோகத்தில் உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்துவையுங்கள். அங்கே பூச்சிகள் துருவதுமில்லை, திருடர் கன்னமிட்டுத் திருடுவதுமில்லை: உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கேதான் உங்கள் இருதயமும் இருக்கும்;

என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்றுகவலைப்படாதிருங்கள். உங்களுக்கு வேண்டியவைகள் என்ன, என்ன என்பதை உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். அவரைத் தேடுங்கள் சகலமும் உங்களைத் தேடும்.

தொகுப்பு: கப்ரின் டீ. ஏ. எம். குணசிங்கம்

## ஆபிரிக்க - மாலிநாட்டில் வெள்ளப்பெருக்கு

# 1000 பேர்பலி; 1600 வீடுகள் நாசம்

ஆபிரிக்க நாடான மாலியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, மண்சரிவினால் ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த அடைமழையினால் ஒருலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 1600 வீடுகள் வெள்ளத்தினால் அள்ளப்பட்டுச் சென்றுள்ளதாகவும் நேற்று ஐக்கிய நாடுகள் சபைக்கு கிடைத்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

# முதலாம் தவணைப் பரீட்சை பாடசாலைமட்டத்தில் நடைபெறும்

இவ் வருடத்திற்கான முதலாம் தவணைப் பரீட்சைகள் பாடசாலைகள் மட்டத்தில் நடாத்தப்படவுள்ளன.

இப் பரீட்சைக்கெனப் புறம்பாக மாணவர்களிடம் எவ்வித பணமும் அறவிடக் கூடாது எனவும், பரீட்சையின் விடைத்தாள்களும், வினாத் தாள்களும் அவ்வப் பாடசாலைகளினால் பேணப்படவேண்டுமெனவும், கல்வித் திணைக்கள அதிகாரிகள் பரிசீலிக்க வரும்போது அவை காண்பிக்கக்கூடியதாக இருக்க வேண்டுமெனவும் யாழ் கல்விப்பணிப்பாளர் சகல கொத்தணி அதிபர்களுக்கும் பணித்துள்ளார். (32 ய

★ மாவட்ட வைத்திய அதிகாரியிடம் புகார்கள்

# பிரான்ஸ் வைத்திய சேவை ஊழியர்களால் அம்புலன்ஸுக்கு வழங்கும் டீசல் விற்பனை

பிரான்ஸ்வைத்திய சேவைக் குழுவினால் மந்திகை அரசினர் வைத்தியசாலை நோயாளர்களை ஏற்றிச்செல்வதற்கென அம்புலஸ் வண்டிக்கு வழங்கப்படும் டீசல் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகப் பலத்த புகார்கள் கிடைத்துள்ளதாக மாவட்டவைத்திய அதிகாரி டாக்டர். எஸ். கதிரவேற்பிள்ளை பிரான்ஸ் வைத்திய சேவைக்குழு இணைப் பதிகாரிக்குஅறிவித்துள்ளார்.

இந்த டீசல் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கு வைத்தியசாலையில் இயங்கிவரும் பிரான்ஸ் வைத்திய சேவைக்குழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

அம்புலன்ஸ் வண்டிக்குவழங்கப்படும் டீசலை உங்கள் தொழிலாளர்கள் அம்புலன்ஸ் வண்டிக்குப் பயன் படுத்தாமல் அதைவிற்பனை செய்துள்ளது எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இது மிகக் கவலைக்குரியதும் அனுமதிக்கமுடியாததுமான விடயமாகும்.

எனவே, வைத்தியசாலை நோயாளர்களின் அம்புலன்ஸ் தேவைக்கான டீசலுக்குஎனது கோரிக்கையின் பேரில் டீசலை எனது அலுவலகத்திற்கு அனுப்பினால் நான் பொறுப்பான உத்தியோகத்தர் மூலம் நோயாளிகளை ஏற்றிச் செல்லும் அம்புலன்ஸ் வண்டிக்கு தேவையான டீசலை ஒழுங்காக நிரப்பநடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

அலுவலக நேரமல்லாத வேளைகளில் வெளிநோயாளர் பகுதியில் பணியாற்றும் வைத்தியர்களிடம் டீசலைவழங்கினால் அவரின் மேற்பார்வையில் டீசல் அம்புலன்ஸ் வண்டிக்கு நிரப்பநடவடிக்கைமேற்கொள்ளப்படும்.

இவ்வாறு மாவட்ட வைத்திய அதிகாரி பிரான்ஸ் வைத்திய சேவைக்குழு இணைப் பதிகாரிக்கு அறிவித்துள்ளார். (15)

## வடமராட்சிப் பகுதியிலும் கால்வாய் நோய் பரவுகிறது

பருத்தித்துறை கால் நடை வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள குடவத்தை, யார்க்கரு கிராமங்களில் கால் நடைகளுக்கு கால்வாய் நோய் பரவிவருவதாகப் பருத்தித்துறை கால் நடை வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். இரவீந்திரநாத் அறிவித்துள்ளார்

இந்நோய் வடமராட்சிப் பகுதியின் ஏனைய பகுதிகளுக்கும் பரவுவதைத் தடுப்பதற்கு கால் நடை வளர்ப்போர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

கால் நடைகளுக்கு கால்வாய் நோய் ஏற்பட்ட கிராமங்களிலிருந்து வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளுக்கு கால்வாய் நோய் ஏற்பட்டிருப்பதை அறிந்து கொண்டால் உடனடியாக பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (15)

## செஞ்சிலுவைச் சங்கத் தெரிவில் போட்டியிலிருந்து ஒருவர் வாபஸ்

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளையின் தலைமைப் பதவிக்கான போட்டியிலிருந்து ஒருவர் விலகிக் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது

இம் மாதம் 24 ஆம் திகதி யாழ் பரியோவான் கல்லூரியில் நடைபெறவிருக்கும் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் இதற்கான தெரிவுகள் நடைபெற இருந்தமை தெரிந்ததே.

ஒரு பதவியின் செயற்பாடுகளுக்கு இரண்டு டாக்டர்கள் போட்டியிடுவது மக்கள் மத்தியில் தேவையற்ற விமர்சனத்தை ஏற்படுத்தும் என்பதாலும் டாக்டர்களாகவே மக்கள் மதிக்காத ஒரு நிலை உருவாகும் என்பதுமே இப் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதற்கான காரணம் என்று மேற்படி டாக்டர் தெரிவித்தார்,

இந்த டாக்டரின் அனுதாபிகள் மத்தியில் இந் முடிவு ஒரு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. (47)

## சிறுவர்களை தத்தெடுப்பது விரைவில் புதிய சட்டம்

சிறுவர்களை தத்தெடுப்பது தொடர்பான சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளதாக சிறுவர் பராமரிப்பு பாதுகாப்பு ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இப்புதிய திருத்தத்தின் படி தனிப்பட்டவர்கள் குழந்தைகளை தத்தெடுப்பது தடை செய்யப்படும் என்றும் அரசாங்க சிறுவர் இல்லங்கள் மூலமாகவே சிறுவர்களை வெளிநாட்டுப் பிரசைகள் தத்தெடுக்க முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

1964 ஆம் ஆண்டுக்குப் பின் பத்தாயிரம் இலங்கைக் குழந்தைகள் வெளிநாட்டவர்களால் தத்தெடுக்கப்பட்டுள்ளதாகவும் தத்தெடுத்தல் ஒரு பெரிய வியாபாரமாக நடைபெறுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறுவர் இல்லம் தவிர்ந்த வேறு எந்த அமைப்போ தனி நபரோ வெளிநாட்டவருக்கு சிறுவர்களைக் கையளித்தல் சட்டப்படி குற்றமாகும். (33)

## வீர மரணம்

ஆனையிறவு இராணுவத்தினருடன் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் கடர் (சின்னப்புராசா- ராசமோகன் கிளிநொச்சி) வீரமரணமடைந்தார்.

மூதூரில் இராணுவத்தினருடனான எதிர்பாராத மோதலில் 2ம் லெப். பிரதீப் வீர மரணம் அடைந்தார். (71)

## அரசாங்க அதிபர்களுக்கு 1992முதல் பல பொறுப்புகள்

அதிகார பரவலாக்கல் திட்டத்தின் கீழ் நாட்டின் சகல அரசாங்க அதிபர்களும் எதிர் வரும் ஆண்டுகளில் மாவட்ட செயலாளராகவும் கடமையாற்றவுள்ளனர்.

இவர்களுக்கு இப்பதவியுடன் முக்கிய பணிகள் அடங்கிய பொறுப்புக்களும் ஒப்படைக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை தமது அமைச்சு செயற்படுத்தி வருவதாக பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டு விவகார அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார். (38)

பாண்...

தரம் உள்ளதாகவும் இருக்க வேண்டும். 350 கிராமுக்கு குறைவாக உள்ள பாணை உற்பத்தி செய்யும் பேக்கரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தண்டப் பணமும் அறவிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

அத்துடன் பேக்கரிகள் கூடியளவுக்கு கேக், பணிஸ் உற்பத்தியை குறைக்க வேண்டு

கணவனுக்கு...

ஆங்கில எழுத்துவரிசைக் கிரமத்தில் ஒழுங்கு படுத்தும் போது வெவ்வேறு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில்

புதிய...

நியமிக்கப்பட வேண்டும்என்று கூட்டணி வற்புறுத்தி வந்தது. ஆனால் ஈ பி ஆர். எல். எவ். இயக்கம் யோகசங்கரி தமது எம்.பியானதால் கூட்டணிக்கு இடமில்லை என வாதாடி வந்ததும் குறிப்பிடத்தக்கது.

முதலில் யோகசங்கரியின் இடத்துக்கு கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரத்தின் பெயரும், நீலன் திருச்செல்வத்தின் பெயரும்

முல்லைத்தீவுப்...

கிளினிக்குகளும் ஒழுங்கற்றுப் போவதாலும் இவர்கள்பாதிக்

அரச அதிபரின் அனுமதியுடன் கொணர்ந்த

## மண்ணெண்ணெய் விற்பது செயலகத்துக்கு அறிவிக்கவேண்டும்

யாழ் அரசாங்க அதிபரின் அனுமதியுடன் அனுராதபுரம் சென்று மண்ணெண்ணெய் கொண்டுவந்தவர்கள் அரசாங்க அதிபருக்கு அது குறித்து அறிவிக்காமல் விற்பனை செய்வதாக செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்க அதிபரின் அனுமதிக்கடிதத்துடன் மண்ணெண்ணெய் கொண்டு வந்தால் அது பற்றி செயலகத்துக்கு அறிவிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலர் கொழும்பில் கூட்டுப் படை தலைமையகத்தின் அனுமதியுடன் அங்கிலிருந்து மண்ணெண்ணெய் கொண்டு வந்துள்ளதாகவும் இவர்களும் செயலகத்துக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் உயர் அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை குடாநாட்டில் மண்ணெண்ணெய் விலை வீழ்ச்சியடைந்து வருவதாக வர்த்தக வட்டாரங்கள் கூறின. (66)

## எதிர்வரும் ஆனி மாதம் ஐ.நா. உலகசுற்றாடல் தினம்

ஐக்கிய நாடுகள் உலக சுற்றாடல் தின விழா சுண்டுக்குளி மகளிர் கல்லூரியுடன் இணைந்து இவ்வாண்டு ஆனி மாதம் 5 ஆம் திகதி சிறப்பாக நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் மாணவர்களின் பங்களிப்பை ஊக்குவிக்கவும், அவர்களின் திறமையை பாராட்டவும் அவர்கள் பங்கு பற்றும் நிகழ்ச்சிகளுக்கு தகுதியின் அடிப்படையில் பரிசில்கள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வகையில் தகுதிவாய்ந்த ஸ்தாபனங்கள், நிறுவனங்கள், மற்றையோர் மாணவர்களுக்கான 'பரிசில்கள்' தந்து உதவ முடியும் என ஐக்கிய நாடுகள் சங்க யாழ் பிரிவு அறிவித்துள்ளது.

பரிசில்களின் பெறுமதியையும் தன்மையையும் கணித்து மத்தியஸ்தர் குழுவினால் எந்த நிகழ்ச்சிக்கு எந்த அடிப்படையில் வழங்குவதென தீர்மானிக்கப்படும். 'பரிசில்கள்' தந்துதவ விரும்புவோர் அதிபர் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்படுகிறது (16)

இலங்கை ஏற்றுக்கொண்டுள்ளது

## சிறுவர் உரிமைகளைப் பேணும் ஐ. நா. உடன்படிக்கை

சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த குழந்தைகள் தமது சொந்த கலாசாரத்தையும் மொழியையும் பேணும் உரிமை உடையவர்கள் என்பதை சிறுவர் உரிமைகள் பற்றி ஐ. நா. உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

60 நாடுகள் கைச்சாத்திட்டுள்ள இவ்வுடன்படிக்கை சிறுவர் நலத்துக்கு பாதுகாப்புக்குமான ஒரு சட்ட வலுவுடைய ஏற்பாடாகும்.

சிறுவர் எவ்வித பாகுபாடும் காட்டப்படாது நடாத்தப்படுகிறார்கள் என அரசு உறுதி செய்யவேண்டும்.

தமது குடும்பத்தோடு இணைந்து கொள்ளுதல், அநாதரவாக கிடப்பாமை, பிள்ளைகள் நலன்கருதியே தத்தெடுப்பது, அகதிக்குழந்தைகளுக்கு விசேடபராமரிப்பு உடன் ஊனமுற்ற சிறுவர்களுக்கு விசேட ஏற்பாடு, என்பன இந்த உடன்படிக்கையில் அடங்கும்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் சித்திரவதை செய்தல் போதை மருந்துப் பாவிப்பு/பாலியல்துஷ்பிரயோகத்துக்கு ஆளாகுதல் முதலியவற்றிலிருந்து பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறார். (33)

## வெயில் வெப்பம் காரணமாக

அத்துடன் பேக்கரிகள் கூடி யளவுக்கு கேக், பணிஸ் உற்பத்தியை குறைக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாணை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் 350 கிராம் நிறையுடைய பாணை நிறுத்துப்பார்த்தே சொன்னவு செய்ய வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப 11)

---

## முகாமையாளர்...

நிகழ்ந்துள்ளது.

இக்கிளையில் பெறப்படும் பொருள்களின் நிறை குறைவாக இருப்பதாக பொதுமக்கள் பல புகார்களை யாழ் செயலகத்திற்கு தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து யாழ் உள்நாட்டுவர்த்தக திணைக்கள அளவைகள் நிறுவைகள் பரிசோதகர் கே. எஸ். ருபேந்திரன் தலைமையிலான பரிசோதனைக்குழு இக்கிளையில் திடீர் நடவடிக்கையில் இறங்கிய போது இந்த மோசடி அம்பலமானது. (15(

போது வெவ்வேறு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து இவ்வாறு ஒரு கணவனுக்கு இரண்டு மனைவியர் நஷ்டஈடு கோரியுள்ளமை தெரியவந்துள்ளது

இவ்வாறான விண்ணப்பங்கள் தொடர்பான விசாரணைகள் தற்போது செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (66)

---

## சிலாவத்துறை

விக்க இராணுவ செயற்பாட்டுத் தலைமையகம் மறுத்து வருவதாகவும், வடக்கில் ஊரடங்கு பிறப்பித்துள்ளதாக மட்டுமே கூறப்படுகிறது எனவும் கொழும்பில் உள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மடுவில் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்க இருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு தற்போது தமது கரையோர முகாம்களைப் பாதுகாக்கும் பிரச்சினை ஏற்பட்டு விட்டதாக பி பி. ஸி- தெரிவித்தது.

---

தலைவர் மு. சிவசிதம்பரத்தின் பெயரும், நீலன் திருச்செல்வத்தின் பெயரும் அரசியல் வட்டாரத்தில் அடிபட்டு வந்ததும் தெரிந்ததே.

---

## மன்னாரில்...

ஆனோல்ட் (கிருஷ்ணபிள்ளை குகன் - ரம்பைக்குளம் வவுனியா), மொறிஸ் (சண்முகம் தவராசா - வரணி), கனா (ராஜரட்ணம் வசந்தி -கடற்கரைச்சேனை திருமலை), சுதா (தேவராசா மேரிக்குயினா - வல்வெட்டித்துறை), டெவின் (வே. ஞானகுமன் - புளியன்கூடல் ஊர்காவற்றுறை), சிவசங்கர் (ராஜேந்திரகுமார் - நாவாந்துறை.

---

## ஈழ...

மிப்புக்குள்ளான காஸாப் பகுதி பலஸ்தீன அகதிகளுக்கும் ஐம்பது லட்சம் டொலர் உதவி வழங்கப்படும் எனவும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

---

## நவீன...

தகுந்த பாஸ்போட் ஏதும் இல்லாத இவர்கள் யாழ்ப்பாணத்தை சேர்ந்தோர் எனவும் அகதிகள் அந்தஸ்தை பெற்றவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

---

இளைஞர்களும் ஒழுங்காற்று போவதாலும் இவர்கள் பாதிக்கப்படுகின்றனர். (38)

---

## தேர்தலுக்கு...

மண்டுவில் உள்ள சார்க் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டுள்ளது.

---

## இரத்ததானம்—

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களும், நேற்று கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சுமார் 50க்கும் மேற்பட்ட மாணவர்களும், சென் ஜோன்ஸ் கல்லூரி மற்றும் வட்டு. இந்து சம்பந்தர் கல்லூரி மாணவர்களும் இரத்ததானம் செய்தனர்.

மேலும் பல பாடசாலைகளின் மாணவர்களும் இரத்ததானம் செய்ய முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

போர்க்கால சூழ்நிலையில் இரத்ததானம் செய்யவிரும்பும் அமைப்புகள், பாடசாலைகள் தங்கள் பெயர்களை யாழ். போதனா வைத்தியசாலை இரத்தவங்கியில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (74)

---

# வெயில் வெப்பம் காரணமாக கண்நோய் பொக்கிளிப்பான்

தற்போது வெயில் வெப்பம் காரணமாக கண்நோய் பொக்கிளிப்பான் போன்ற நோய்கள் சில இடங்களில் பரவி வருவதாக சுகாதாரப் பகுதி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

குறிப்பாக அகதிகள் முகாம்களிலும் இவை சிறுக்கு பிடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதாரப் பழக்கங்களைக் கைக்கொண்டால் இந்நோய்கள் மேலும் பரவாமல் தடுக்கலாம் எனவும் வட்டாரங்கள் தெரிவித்தன. (33)

---

## கிளிநொச்சியில்...

ததே.

கிளிநொச்சியில் 6, 600 ஹெக்டயர் பரப்பில் சிறுபோக நெற்செய்கை செய்யக்கூடியதாக இருந்தால் நிச்சயமாக அது வெற்றிகரமாக அமையும் எனவும் அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் ஒவ்வொரு விவசாயியும் ¼ ஏக்கரில் உழுந்து பயறு, கௌபீ போன்ற தானியங்களைப் பயிர் செய்யும்படி அரச அதிபர் அறிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கென இதற்காக உப பயிர்கள் இலவசமாக வழங்கப்படும் எனவும் அவர் மேலும் சொன்னார்.

(33,-ப6)

---

## சுற்றிவளைப்பு

திருமலை உவர்மலை கிராமத்தை முகமூடிகளின் உதவியுடன் சுற்றிவளைத்த இராணுவத்தினர் 9 பொது மக்களை கைது செய்து கொண்டு சென்றனர். கடந்த 18ம் திகதி நடைபெற்ற இச்சம்பவத்தில் கொண்டு செல்லப்பட்டவர்களின் நிலை குறித்து இதுவரை தெரியவில்லை 71

---

## புதுக்குடியிருப்பு...

திரும்பிவருகிறது.

முன்னரை விட பாடசாலை மாணவர் வரவும் அதிகரித்திருக்கிறது. (38

---

## 3 கூட்டுறவுச்...

உள்ள மூன்று ப. நோ. கூ. சங்கிளைகள் வகைபாக மாட்டிக் கொண்டுள்ளன.

---

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு "டச்சு வீதி, லஷ்மி பில்டிங்"கில் உள்ள அச்சகத்தில் 22 - 03 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது!